மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்
அசல் வழக்கு எண். 338 /2021

**2023–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–1 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : தனக்கோடி | தொழில் | : விவசாயம் |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : செல்வராஜ் | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : முருக்கன்குடி | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 45/2023 |

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

1) நான் பிறந்தது மற்றும் திருமணம் செய்து கொண்டது அனைத்தும் முருக்கன்குடி கிராமம் என்றால் சரிதான். எனது அப்பா பெயர் தங்கவேல் ஆகும். வழக்கின் வாதி சிவக்கொழுந்து எனக்கு மாமன் மனைவி ஆவார். வாதி எனக்கு உறவு முறை என்பதை என்னுடைய எதிர் வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். எதிர் வழக்குரை மற்றும் என்னுடைய முதன்மை வாக்குமூலத்தில் உள்ள தகவல்களை நான் சொன்னதன்பேரில்தான் வழக்கறிஞர் தயார் செய்தார் என்றால் சரிதான்.
2) தாவா சொத்து பொறுத்து வாதிக்கும் அவரது கணவருக்கும் வாதியின் மாமனார் தான செட்டில் மென்ட் எழுதி கொடுத்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியும். என்னுடைய அம்மாவின் அப்பா பெயர் பொன்னுசாமி என்றால் சரிதான். பொன்னுசாமியின் அண்ணன் பெயர் கஞ்சமலை என்றாலும் சரிதான். கஞ்சமலைக்கு வாதியின் கணவர் மட்டும் வாரிசு என்றால் சரிதான். தாவா சொத்து எ அட்டவணை சொத்து மற்றும் அதன் ஓரமாக உள்ள சர்வே எண். 315/6, 315/7, 315/10 , 315/8, உள்ள சொத்துக்களை பொன்னுசாமி மற்றும் கஞ்சமலை சேர்ந்து அனுபவம் செய்து வந்தார்கள் என்றால் சரிதான்.
3) நான் எனது எதிர் வழக்குரையில் 1978 ம் தேதியிட்ட பத்திரம் அமுலுக்கு வரவில்லை என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி பத்திரம் அமுலுக்கு வந்ததால்தான் என்னால் கிரயம் வாங்க முடிந்தது என்றால் சரிதான். வாதியிடம் 2005 ம் வருடம் சர்வே எண். 315/9 ல் 20 சென்ட்டில் 10 சென்ட் நான் கிரயம் பெற்றேன் என்றால் சரிதான். மீதியுள்ள 10 சென்ட்டை வாதி அனுபவம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மீதி 10 சென்ட்டை நான் வாதியிடம் இருந்து இன்னும் கிரயம் பெறவில்லை. சர்வே எண். 315/9 ல் தான் கிணறு அமைந்துள்ளது என்றால் சரிதான்.

DIVAKAR UDUMBA

4) நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு வரை சர்வே எண். 315/9 ல் உள்ள கிணற்றில் இருந்துதான் தாவா ஏ அட்டவணை சொத்திற்கு தண்ணீர் கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பி.வா.சா. ஆ 1 ல் சர்வே எண். 315/9 ல் கிணற்றில் பாதி உரிமையும், மின் மோட்டாரில் பாதி பாத்தியம் மற்றும் வழி நடை பாத்தியம் ஆகியவற்றை தக்க வைத்துக்கொண்டுதான் எனக்கு பத்திரம் எழுதி கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5) சர்வே எண். 315/9 ஏ. பி. சி ஆகியவற்றிற்கு பின்னால்தான் வாதியின் மற்ற நிலங்கள் வருகிறதா என்றால் எனக்கு சர்வே எண்கள் பற்றி அவ்வளவாக தெரியாது. எனது நிலத்திற்கு அடுத்தாற்போல்தான் வாதி சிவக்கொழுந்தின் நிலம் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 315/8, 315/9, ஏ. பி. ஆகியவற்றை நான் கிரயம் பெற்றுள்ளேன் மேற்படி நிலங்களில் உள்ள பாதை வழியாகதான் வாதி மற்றும் எனது குடும்பத்தார் அடுத்துள்ள நிலங்களுக்கு சென்று வந்தோம் என்றால் இல்லை ஏரிக்கரை வழியாக உள்ள பொது தடம் வழியாகதான் நாங்கள் செல்வோம்.

6) நான் சொல்வதுபோல் நான் கிரயம் வாங்குவதற்கு முன்பு சர்வே எண். 315/9 சி வழியாகதான் சென்று வருவார்கள் என்றாலும் அவர்கள் சுற்றி வரவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வாதி என்னிடம் கிரயம் கேட்டதாக சொல்லி இருப்பது பொய் என்று சொன்னால் சரியல்ல. வாதியின் கிணற்றில் உள்ள உரிமை மற்றும் வழி நடை பாத்தியத்தை இவ்வளவு நாட்களாக நான் தடை செய்யாததால் தான் வாதி வழக்கு தொடுக்கவில்லை. 11 ஆண்டுகளுக்கு பிறகு நான் தற்போது அந்த உரிமைகளை மறுத்ததால் தான் வாதி வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று சொன்னால் சரியல்ல.

7) எனது அம்மா எனக்கு தான செட்டில் மென்ட் கொடுத்துள்ளார்களா என்றால் பத்திரத்தை பார்த்தால்தான் என்னால் சொல்லமுடியும். தாவா சொத்துக்கள் மற்றும் அதனை சுற்றியுள்ள சொத்துக்கள் எல்லாம் எங்களுக்கும் வாதிகளுக்கும் பாத்தியப்பட்ட சொத்து என்பதால் தாவா ஏ அட்டவணை சொத்திற்கு தாவா பி அட்டவணை சொத்து வழியாகதான் சென்று வருவார்கள் என்றாலும் நான் எனது கிரய பத்திரத்திற்கு எதிராக அவர்களுடைய வழி நடை பாத்தியத்தையும் கிணற்றில் உள்ள உரிமையும் மறுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள எதிர் வழக்குரையில் பொய்யான சங்கதிகளை குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரியல்ல.

8) வாதியின் உரிமைகளை தடுப்பதற்கு எனக்கு எவ்விதமான உரிமையும் இல்லை என்றாலும் வாதிக்கு தாவா படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**பிரதிவாதி தரப்பு மறு விசாரணை**

1. சர்வேஎண். 315/9 தற்போது 315/9 ஏ, மற்றும் 315/9 பி என உட்பிரிவாகி உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 315/9 ஏ வில் தான் கிணறு உள்ளது என்றால் சரிதான். அந்த கிணற்றில் பாதி எங்களுக்கு பூர்வீகமாக பாத்தியப்பட்டது பாதி கிரயம்

DMWMNMWMM

வாங்கப்பட்டது என்றால் சரிதான். தற்போது தாவா சொத்துக்களை நான்தான் அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். நான் கிரயம் வாங்கிய சொத்தில் கரும்பு பயிர் செய்துள்ளேன் வாதி அவருடைய இடத்தில் சோளம் பயிரிட்டுள்ளார்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை**

நான் மறு விசாரணையில் சொல்லிய விபரங்கள் எனது எதிர் வழக்குரையில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 2 ஆனது வாதியின் கணவர் பெயரில் உள்ள தனிப்பட்டா என்றால் சரிதான். சர்வே எண். 315/9 ஏ ல் 8 ஏர்ஸ் வாதியின் கணவர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். சர்வே எண். 315/9 ஏ ல் உள்ள 20 சென்ட்டுமே வாதியின் கணவருக்கு பாத்தியப்பட்டது என்றாலும் எங்கள் யாருக்கும் அதில் உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல.

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif-cum-Judicial
Magistrate, Kunnam.

DMCJM KUNNAM

<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குன்னம்</u>
<u>அசல் வழக்கு எண். 338 /2021</u>

**2023–ம் ஆண்டு பிப்ரவரி மாதம் 15 ம் நாள் புதன் கிழமை** வாதி/பிரதிவாதி தரப்பு சாட்சியாகிய DW–2 வது நபரின் வாக்குமூலம் (1969–ம் ஆண்டின் 54 வது விதியில் 9–வது பிரிவின் ஏற்பாட்டின் படி) திரு. கோ. லோகநாதன், உதவியாளர் என்பவரால் ஆணையிட்டு உறுதிமொழி செய்விக்கப்படுகிறது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : செல்வராஜ் | தொழில் | : சர்க்கரை ஆலையில் பணியாற்றி தற்போது ஓய்வு பெற்று விட்டேன். |
| தகப்பனார்/ கணவர் பெயர் | : பெருமாள் | வட்டம் | : குன்னம் |
| கிராமம் | : முருக்கன்குடி | சமயம் | : – |
| சாதி | : – | வயது | : 61/2023 |

**பிரதிவாதி தரப்பு முதல் விசாரணை**

1) நான் தாவா வழக்கில் பிரதிவாதி தரப்பு 2–ம் சாட்சி ஆவேன். என்னால் தாக்கல் செய்யப்படும் நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதை என் தரப்பு முதல் விசாரணையாக ஏற்க வேண்டுகிறேன்.

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை – இல்லை.**

Taken Court by in Open Court read and to the witness and admitted by the witnesses to be correct.

District Munsif-cum-Judicial
Magistrate, Kunnam.

DMC KUNNAM